**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8120328

1. District : மாவட்டம் திருநெல்வேலி
   PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை
   Year: ஆண்டு 2025
   FIR No.: மு.த.அ. எண் 01/2025
   Date: நாள் 03/02/2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 7(b)
   (ii) Act சட்டம்: as amended by the PC Act — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 31/01/2025
   Date from : நாள் முதல்
   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு 1050 hrs
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03/02/2025
   Time : நேரம் 0700 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol I
   Time : நேரம் 0745 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 35 Km தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி — தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானப்பிரிவு, களக்காடு, திருநெல்வேலி மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — S. ரமேஷ்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — சுந்தரபாண்டியன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் — இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் — கூலி
   (g) Address : முகவரி — த.எண் : 4/84, எம்.ஜி.ஆர் காலனி, நயினார் கோவில் தெரு, பெரும்பச்சேரி, களக்காடு வடக்கு, திருநெல்வேலி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. சிவசங்கரன், உதவி மின் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானப்பிரிவு, களக்காடு, திருநெல்வேலி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — சொந்த வேலை காரணமாக வெளியூர் சென்றுவிட்டதால் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 03.02.2025 தேதி காலை 07.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், பெரும்பச்சேரி கிராமம், நயினார்கோவில் தெரு, எம்.ஜி.ஆர்.காலனி, க.எண்.4/84 என்ற முகவரியில் வசிக்கும் சந்தவழியான் என்பவரின் மகன் திரு.S.ரமேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், இளையான்குடி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானப்பிரிவு, உதவிமின்பொறியாளர் திரு.சிவக்குமார் ஆகியோரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 03/02/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature]

15. Date & Time of despatch to the court: 03/02/2025 0830 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. சேகரன் காவல் ஆய்வாளர்
Rank: நிலை ....................No. எண் ..........
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சிவகங்கை

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.01/2025 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

அன்னாரின் அனுமதி பெற்று 03.02.2025-ம் தேதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.01/2025 u/s.7(b) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர்: S.ரமேஷ், த/பெ.சந்தவழியான், க.எண்.4/84, எம்.ஜி.ஆர்.காலனி, நயினார்கோவில் தெரு, பெரும்பச்சேரி, இளையான்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம், பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு நாங்கள் இளையான்குடி அருகில் உள்ள குணப்பனேந்தல் கிராமத்தில் அப்பா அம்மாவுடன் குடியிருந்து வந்தோம். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வெளிநாட்டில் லேபராக கடந்த 5 வருடங்களாக வேலை செய்து வருகிறேன். மேற்படி முகவரியில் அப்பா பெயரில் இருந்த வீட்டை எனது பெயருக்கு 2019ம் வருடம் தான செட்டில் மெண்ட் பத்திரம் அப்பா எழுதிக் கொடுத்தார். அதன்படி எனது பெயரில் பட்டா மாற்றம் ஆகிவிட்டது. மின் இணைப்பு மட்டும் எனது அப்பா பெயரில் இருந்து வந்தது. நான் வெளிநாட்டில் இருந்து எனது வீட்டிற்கு தற்போது வந்துள்ளேன். அப்பா பெயரில் இருந்த மின் இணைப்பை எனது பெயருக்கு மாற்றம் செய்வதற்காக 29.01.2025ம் தேதி இளையான்குடியில் உள்ள இசேவை மையத்தில் சம்மந்தப்பட்ட ஆவணங்களை வைத்து அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்தி ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்ப நகல்களை எடுத்துக்கொண்டு 30.01.2025ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் இளையான்குடி உதவி மின் பொறியாளர் அலுவலகம் சென்று கவுண்டரில் இருந்த நபரிடம் எனது பெயருக்கு மின் இணைப்பை மாற்றம் செய்ய வேண்டிய ஆவணங்களை அவரிடம் கொடுத்து விபரம் கேட்டேன். அதற்கு அந்த நபர் "AE. தற்போது இல்லை. உங்கள் பெயர் மாற்ற விண்ணப்ப ஆவணங்களை AE. இடம் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் நாளை (31.01.2025) காலை அலுவலகம் வந்து இது சம்மந்தமாக AE.யை பார்த்து பேசிக்கொள்ளுங்கள்" என்று சொன்னார். அதன்படி நான் 31.01.2025ம் தேதி காலை சுமார் 10.50 மணியளவில் இளையான்குடி உதவி மின்பொறியாளர் அலுவலகம் சென்று உதவி மின் பொறியாளர் திரு.சிவக்குமார் அவர்களை சந்தித்து எனது மின் இணைப்பு பெயர் மாற்றம் குறித்து கேட்டபோது, அவர் "உங்கள் பெயருக்கு மின் இணைப்பு மாற்றம்

செய்யப்பட்டு விட்டது நீங்கள் வேண்டுமானால் அலுவலக கவுண்டரில் உங்கள் மின் இணைப்பு எண்ணிற்கு முன்பணமாக ரூ.100 செலுத்தி, இரசீதில் உங்கள் பெயர் மாறிவிட்டதை சரிபார்த்துவிட்டு வந்து என்னை பாருங்கள்" என்று சொன்னார். நான் அவர் சொன்னதன்பேரில் கவுண்டரில் மின் இணைப்பு எண் 05441024690ற்கு ரூபாய் 100 கட்டணம் செலுத்தி, சரிபார்த்த போது எனது பெயருக்கு மின் இணைப்பு மாற்றப்பட்டது தெரியவந்தது. அதற்கு உண்டான இரசீதை பெற்றுக்கொண்டு அவர் சொன்னபடி, மீண்டும் இளையான்குடி உதவி மின் பொறியாளர் திரு. சிவக்குமாரை சந்தித்து, எனது பெயருக்கு மின்இணைப்பு மாற்றம் செய்யப்பட்டது பற்றி கூறினேன். அதற்கு அவர் உங்கள் விண்ணபத்தை ஏற்றுக்கொண்டு உடனே உங்கள் பெயரில் மின் இணைப்பை மாற்றம் செய்துவிட்டேன். அதனால் எனது செலவிற்கு ரூபாய் 2,000/-ம் கொடுங்கள் என்று சொன்னார். அதற்கு நான் ஏற்கனவே மின் இணைப்பு மாற்றம் செய்வதற்கு தேவையான பணத்தை அரசுக்கு செலுத்திவிட்டேனே சார் என்று சொன்னேன். அதற்கு அவர், அது அரசுக்கு செலுத்த வேண்டிய பணம், இப்ப நான் கேட்பது எனது செலவிற்கு உண்டான பணம், அதனால் எனக்கு கொடுங்கள் என்று சொன்னார். நான் ரொம்ப கஷ்டப்படுகிறேன் என்று சொன்னேன். அதற்கு இளையான்குடி உதவி மின்பொறியாளர் திரு. சிவக்குமார் அவர்கள் பணம் ரூ.500யை குறைத்துக்கொண்டு பின்னர் ரூ.1,500/- கொடுங்கள் என்று சொன்னார். தற்சமயம் நான் பணம் கொண்டு வரவில்லை என்று சொன்னதற்கு, நான் செய்த வேலைக்கு நீங்கள் கண்டிப்பாக நான் கேட்ட பணத்தை கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்றும் இல்லை என்றால் உங்கள் மின் இணைப்பு பெயர் மாற்றம் கேன்சலாகிவிடும் என்றும் சொன்னார். அதற்கு நான் அவரிடம், சரி சார் நான் திங்கட்கிழமை வந்து பார்க்கிறேன் என்று சொன்னதற்கு, நீங்கள் வரும்போது நான் அலுவலகத்தில் இருந்தால் என்னிடம் பணத்தை கொடுங்கள், ஒருவேளை நான் அலுவலகத்தில் இல்லை என்றால் என்னுடைய போன் நம்பரான 8838247073 ற்கு போன் பேசுங்க, நான் வந்து பணத்தை வாங்கிக்கொள்கிறேன் என்று சொன்னார். நான் அங்கிருந்து வந்துவிட்டேன். பிறகு இந்த விஷயத்தை எனது மனைவியிடம் கலந்து பேசி லஞ்சப்பணம் கொடுக்க வேண்டாம் என்றும் நம்மிடம் லஞ்சம் கேட்கும் இளையான்குடி உதவி மின் பொறியாளர் திரு. சிவக்குமார் என்பவர் மீது சிவகங்கை மாவட்ட லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் வந்து புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்தோம், எனக்கு சொந்த வேலைகள் இருந்ததால் வெளியூர் சென்றுவிட்டேன். அதன் பிறகு 03.02.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு சிவகங்கை மாவட்ட லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் வந்து என்

பெயரில் மின் இணைப்பை மாற்றம் செய்ததற்காக பணம் ரூ.1,500/- லஞ்சம் கேட்கும் இளையான்குடி உதவி மின்பொறியாளர் திரு. சிவக்குமார் என்பவர் மீது புகார் கொடுக்கிறேன். தாங்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxx. இணைப்பு எனது பெயரில் உள்ள பட்டா நகல், எனது பெயரில் உள்ள வீட்டு வரி இரசீது நகல். என் பெயரில் மின் இணைப்பு மாற்றம் செய்ததற்கான மின் கட்டண ரசீது நகல்.

Sir, Received the complaint on 03.02.2025 at 07.00 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.01/2025 u/s 7(b) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 03.02.2025 at 07.45 hrs and took up for investigation. sd.R.Jesudoss, Inspector of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

R. Jesudoss (signature) 03/2/25

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Sivagangai.